**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

**GWOP. No: 23/2025** **நாள்: 03.07.2026**

**மசா.1, திரு.சந்திரசேகர்**

**மசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் டிப்ளமோ சிவில் இன்ஞினேரிங் படிப்பை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவையும் நிரூபண வாக்குமூலத்தையும் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். மனுவில் சொல்லியவாறே என்னுடைய சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன். அதில் எந்த மாற்றமும் இல்லை. என் மனைவியும் என் குழந்தையும் என்னோடு சேர்ந்து வாழ தயாராக உள்ளார்கள் என்றும் நான் சேர்ந்து வாழ தயாராக உள்ளேனா என்று கேட்டால் இல்லை. நான் என் மனைவியானவரை அழைக்கழிக்கவேண்டியே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது சரியல்ல. உண்மையில் நான் என் மகனுடன் சேர்ந்து வாழ விரும்பினால் இந்த மனுவை நான் வாபஸ்பெற்றுக்கொண்டு என் மனைவியோடு சேர்ந்து வாழ சென்றிருப்பேன் என்று சொன்னால் அப்படியில்லை. நான் இந்த மனுவை எந்த தேதியில் மாதத்தில் தாக்கல் செய்தேன் என்று கேட்டால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் இந்த மனுவை எந்த ஆண்டில் தாக்கல் செய்தேன் என்று கேட்டால் 2024ம் ஆண்டு தாக்கல் செய்தேன். இந்த மனு எண் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் பக்கம் 10ல் பாரா 16ல் " எதிர்மனுதாரர் அவரது சொல்லாலும், செயல்களினாலும் பல கொடுமைகள் செய்து வருவதாலும் இனி எந்த ஒரு காலத்திலும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை. மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தால் தற்கொலை செய்து கொள்வதை தவிர வேறு வழியே இல்லை. அதனால் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து கேட்டு மனுதாரர் விருதுநகர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளார். " என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் விருதுநகர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி 2024ம் ஆண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் அந்த மனு எண் எனக்கு தெரியவில்லை. நான் இந்த அசல் மனுவானதை 10.03.2025ம் தேதியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் விருதுநகர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்துகோரி மனுவான 399/2024 ஆனதை கடந்த 07.12.2024ம் தேதியிலேயே தாக்கல் செய்துவிட்டேன்என்றால் சரிதான். எனவே என்னால் விருதுநகர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி மனு எண்.399/2024 ஆனதை கடந்த 07.12.2024ம் தேதியில் தாக்கல் செய்ததை பற்றி இந்த அசல் மனுவானதை கடந்த 10.03.2025ம் தேதியில் மனுவிலும் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் மனுவில் பாரா 13ல் " கடந்த 30.07.2024ம்தேதி அன்று என்னுடைய நண்பர் D.தயாநிதி அவர்களும் என்னுடைய வீட்டிற்கு வந்து நீ சேர்ந்து வாழ வேண்டாம், நீ செத்தா எல்லா பிரச்சனையும் சரியாகிவிடும் என்று வீடு தேடி வந்து மிரட்டி சென்றார் " என்று

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பக்கம் 8ல் பாரா 11ல் "30.07.2024ம் தேதி அன்று எதிர்மனுதாரரும் அவரது நண்பர் D.தயாநிதி அவர்களும் எனது வீட்டிற்கு வந்து நீ சேர்ந்து வாழ வேண்டாம் நீ செத்தா எல்லா பிரச்சனையும் சரியாகிவிடும் என்று வீடு தேடி வந்து மிரட்டி சென்றார் " என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பிரிந்து வாழ்கிறோம். தற்போது நானும் என் தாயாரும் தனித்தனியாக தான் குடியிருந்து வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் என் மனைவியானவர் தான் என்னை என் தாயாரிடமிருந்து பிரித்து விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் உண்மையாக இருந்திருந்தால் என் மனைவியானவர் என்னை விட்டு பிரிந்து சென்ற பின் நான் 2023ம் ஆண்டு முதல் என் தாயாருடன் வசித்து வந்திருப்பேன் என்றும் என்னுடைய நடவடிக்கை மற்றும் எண்ணங்கள் சரியில்லை என்பதால் தான் என் தாயாரும் என்னை விட்டு தனியாக வசித்து வருகிறார் என்றால் அது சரியல்ல. நான் விவாகரத்து மனுவிலும் மற்றும் இந்த மனுவிலும் மற்றும் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் அது சரியல்ல. என் மனைவியானவர் அவருக்கும் குழந்தைக்கும் ஜுவனாம்சம் கோரி எனக்கு எதிராக 2024ம் ஆண்டு இராஜபாளையம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 15.10.2025ம்தேதியில் வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன். அந்த மனுவில் என் மனைவியானவர் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியும். மேற்படி ஜீவனாம்ச மனுவில் நான்அந்த நீதிமன்றத்தில் கடந்த 07.04.2026, 12.05.2026, 01.06.2026 ஆகிய தேதிகளில் ஆஜராகததால் எனக்கு எதிராக ஒருதரப்பாக்கப்பட்ட உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு ஏற்பட்ட பின்பும் நான்என் மனைவிக்கும் குழந்தைக்கும் ஜீவனாம்ச தொகை கொடுப்பதற்கு முன் வராமல் அந்த ஒருதரப்பாக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யப்பட வேண்டி நான் மறு திறவு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் விருதுநகர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த விவாகரத்து மனுவில் என் மனைவியானவர் எனக்கு எதிராக இடைக்கால ஜீவனாம்சம் கோரி ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த மனுவுக்கு நான் காலதாமதம் ஏற்படுத்த வேண்டி இன்று வரையிலும் பதிலுரையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் பதிலுரையை தாக்கல் செய்துள்ளேன். கடந்த 2023ம் ஆண்டில் என் மனைவியானவர் என் குழந்தையை அழைத்து சென்றுவிட்டதாக சொல்லும் போது இது நாள் வரையிலும் என் குழந்தைக்கு தேவையான கல்விதொகை, உணவு, மருந்து, உடை போன்ற செலவினங்களுக்கு நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் தொகை எதுவும் கொடுக்கவில்லை. என் மனைவியானவர் இதுநாள் வரையிலும் குழந்தையை என்னிடம் காட்டவில்லை காட்டினால் நான் தொகை செலுத்த தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் பாரா 12ல் "

கடந்த 14.07.2024ம் தேதி அன்று இராஜபாளையம் அனைத்து மகளிர காவல்நிலையத்தில் இருந்து வந்த விசாரணை அழைப்பாணையில் எதிர்மனுதாரர் , மனுதாரர் மீதுபுகார் மனு கொடுத்திருப்பதகாவும் அதில் விசாரணைக்கு 26.07.2024மதேதி அன்று வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மீதும் அவரது குடும்பத்தார்கள் மீது உள்ள உயிர் பயத்தினால் காவல்நிலைய விசாரணைக்கு போக பயந்து மனுதாரர் அவர் தரப்பு வாக்குமூலத்தை கடந்த 25.07.2024ம் தேதி அன்று பதிவு தபால் மூலம் இராஜபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும் அதன் நகலை எதிர்மனுதாரருக்கு அனுப்பினேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் அது சரிதான். நான் விருதுநகர் மகளிர் காவல் நிலையத்தில் என் குழந்தையை பார்க்க வேண்டும் என்று சொல்லி நான் மனு நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்று கேட்டால் மனு கொடுத்தேன் ஆனால் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் இராஜபாளையம் மகளிர் காவல் நிலையத்தில் என் மனைவி கொடுத்திருந்த புகாருக்கு நான் என்னுடைய வாக்குமூலத்தை பதிவு தபாலில் அனுப்பியது போல் விருதுநகர் மகளிர் காவல் நிலையத்திற்கு புகாரை பதிவு தபாலில் அனுப்பினேனா என்று கேட்டால் இல்லை. நான் விருதுநகர் மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்திருந்த மனுவின் பேரில் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் மனுவை மேல்நடத்திக்கொள்ள எந்தவிதமான துரித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் என் மனைவியானவரை அழைக்கழிக்கவேண்டி மற்றும் துன்புறுத்தவேண்டி இந்த பொய்யான மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அப்படியில்லை. நான் மனுவில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல .

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 03rd day of July 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.